

விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் இனமான பேராசிரியர் அவர்களின் 6ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு செஞ்சி பேருந்து நிலையம் எதிரில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த அவரது திருவுருவப்படத்திற்கு விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர்முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார். தொடர்ந்து கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் 9 தேதி திருச்சி மாவட்டத்தில் நடைபெறும் கழக நிர்வாகிகள் சந்திப்பு மாநாட்டில் கழக நிர்வாகிகள், பொதுமக்களுக்கு அழைப்பு விடுத்தமுதலமைச்சரின் அழைப்பிதழை கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்களிடம் விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. வழங்கி மாநாட்டில்கலந்து கொள்ள வேண்டும் என முதலமைச்சரின் அழைப்பிதழை வழங்கினார். உடன் செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் , வல்லம் ஒன்றிய பெருந்தலைவர் அமுதா ரவிக்குமார்,பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலி மஸ்தான், ஒன்றிய செயலாளர் நெடுஞ்செழியன் மொடையூர் துரை, மாவட்ட கவுன்சிலர் அரங்க ஏழுமலை உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் உள்ளனர்.



இராணிப்பேட்டைமாவட்டம் நெமிலி பேரூராட்சி சாய்ராம்நகர் பகுதியில் அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி ரூ.15 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள அங்கன்வாடி மைய கட்டிடத்தை கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் மாவட்ட செயலாளர் ஆர்.காந்தி திறந்து வைத்தார்.உடன் மாவட்ட அவைத்தலைவர் ஏ.கே.சுந்தர மூர்த்தி,ஒன்றிய குழு தலைவர் பி.வடிவேலு, பேரூராட்சி தலைவர் ரேணுகா தேவி, மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# திருச்சி சிறுகனூர் மாநாட்டில் பெருந்திரளாக பங்கேற்கவேண்டும்!

## திருவாரூர் மாவட்ட செயலாளர் பூண்டி.கே. கலைவாணன் எம்.எல்.ஏ.அறிக்கை!

திருவாரூர்,மார்ச் 9 -

திருச்சியில் தமிழ்நாடு முதல்வர் ,திராவிட நாயகர் கழக தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் 2026 மீண்டும் கழக ஆட்சி என்பதற்கான முன்னோட்டமாக, திருச்சி சிறுகனூர் வெற்றி மாநாட்டில் திருவாரூர் மாவட்டத்திலிருந்து பல்லாயிரக் கணக்கில் பங்கேற்கவேண்டும் என மாவட்ட செயலாளர் பூண்டி.கே. கலைவாணன் எம்.எல்.ஏ. அழைப்பு விடுத்து அறிக்கை வெளியிட்டுள்ளார்.



அவர்தம் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாவது,

இந்தியாவின் ஏனைய மாநிலங்கள் மட்டுமின்றி, உலக நாடுகளே திரும்பி பார்க்கும் அளவுக்கு அனைத்து தரப்பு மக்களுக்குமான பொற்கால ஆட்சியை தந்துகொண்டிருக்கும் முதல்வர் தளபதி அவர்கள், இந்த சந்ததிகளுக்கு மட்டுமின்றி இன்னும் வரப்போகும் சந்ததிகளுக்கும் சேர்த்து தொலை நோக்கு பார்வையோடு திட்டங்களை தந்து அதனை நிறைவேற்றி வருகிறார்.

மக்கள் அனைவருமே ,தங்களுக்கான திட்டங்களை தங்கள் இடத்தில் இருந்து சிந்திக்கும் ஒரு முதல்வராக தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களை கொண்டாடும் நிலையில், வரப்போகும் 2026 தேர்தலிலும் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான ஆட்சியை தேர்ந்தெடுக்க தயாராகிவிட்டனர்.

இந்த நிலையில் தமிழ்நாடு முதல்வர் ,திராவிட நாயகர் கழக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சீரிய தலைமையில், 2026 -ல் மீண்டும் கழக ஆட்சி என்பதற்கான முன்னோட்டமாக திருச்சிசிறுகனூரில் கழக வெற்றி முன்னோட்ட மாநாடு இன்று (09.03.2026 திங்கள் ) நடைபெறவிருக்கிறது .

10 லட்சம் கழகத்தினர் மற்றும் நிர்வாகிகளை, தமிழ்நாடு முதல்வர் ,திராவிட நாயகர்,கழக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சந்திக்கும் “ஸ்டாலின் தொடரட்டும், தமிழ்நாடு வெல்லட்டும்” மாநாட்டில், நமது திருவாரூர் மாவட்டத்தில் இருந்து மாநில, மாவட்ட ,ஒன்றிய ,நகர ,பேரூர் நிர்வாகிகள், சார்பு அணிகளின்நிர்வாகிகள், வார்டுமற்றும் கிளைக் கழகம் என எந்த ஒரு நிர்வாகியும் விடுபடாத வகையில் அனைத்து நிர்வாகிகளும், கழக தோழர்களும் சரியான நேரத்தில் தவறாமல் கலந்துகொண்டு, கடமை, கண்ணியம்,கட்டுப்பாட்டோடு மாநாட்டில் கலந்துகொண்டு சிறப்பிக்க வேண்டும் என அன்புடன் கேட்டுக்கொள்கிறேன் .


இவ்வாறு மாவட்ட மாவட்ட செயலாளர் பூண்டி.கே. கலைவாணன் எம்.எல்.ஏ.தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

# தீரர் கோட்டமாம் திருச்சிக்கு திரண்டு வாரீர்!

## தஞ்சை வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ. அறிக்கை!

திருச்சி, மார்ச் 9 -

தமிழ்நாடு முதல்வர் - கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களின் அன்பு கட்டளையை ஏற்று திருச்சியில் 9-ஆம் தேதி மாலை நடைபெறும் கழக மாநில மாநாட்டிற்கு தஞ்சை வடக்கு மாவட்டத்தில் உள்ள கழக தோழர்கள் அனைவரும் திரளாது கலந்து கொள்ள மாவட்ட பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ வேண்டுகோள்அறிக்கை விடுத்துள்ளார்.



தீரர்கள் கோட்டமாம் திருச்சியில் தி.மு.கழகத்தின் “ஸ்டாலின் தொடரட்டும் - தமிழ்நாடு வெல்லட்டும் என்கிற தேர்தல் சிறப்பு மாபெரும் கழக நிர்வாகிகள் மாநாடு வருகிற 9-ஆம் தேதி மாலை 4.00 மணியளவில் திருச்சி சிறுகனூரில் மிகவும் கோலாகலமாக நடைபெற உள்ளது. 10 லட்சம் கழக நிர்வாகிகள் பங்கேற்கும் வகையில் மிகவும் பிரம்மாண்டமான முறையில் நடைபெற உள்ளது.

இந்தியத் திருநாடே திரும்பிப் பார்க்கும் வகையில் 10 லட்சம் தி.மு.க. தீரர்கள் திரண்டு சரித்திர சாதனையை படைத்தனர் என்று இந்திய அரசியல் வரலாற்றில் இடம் பெறும் வகையில் திருப்புமுனை மாநாடாக அமைய உள்ளது.

சரித்திர சாதனை படைக்க உள்ள இம்மாபெரும் மாநாட்டில் கலந்து கொள்வது “நமது உரிமை”“ நமது கடமை” என்ற அந்த லட்சிய உணர்வோடு தஞ்சை வடக்கு மாவட்டம் முழுவதிலும் கழக நிர்வாகிகள் கலந்து கொள்ள ஏதுவாக 200க்கும் மேற்பட்ட பேருந்துகளும், வேன் வசதிகளும் அந்தந்த மாநகர, ஒன்றிய, பகுதி மற்றும் பேரூர் செயலாயர்கள் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஆகவே நமது மாவட்டத்திலிருந்து 15 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கழக நிர்வாகிகள் - கழக தீரர்கள் அனவைரும் 9-ஆம் தேதி மாலை 3.00 மணிக்கெல்லாம் திருச்சி சிறுகனூர் மாநாட்டு திடலுக்கு அணி அணியாக திரண்டு வந்து பங்கேற்று, வருகிற 2026-ஆம் ஆண்டு தேர்தலில் மீண்டும் தி.மு.க. தான் ஆட்சிக்கு வரும், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இரண்டாம் முறையாக ஆட்சியை பிடிப்பார் என மக்கள் அனைவரும் எண்ணும் அளவிற்கு இந்த மாநாடு சரித்திர சாதனையை படைக்கும்படி அலைக்கடலென திரண்டு வாரீர், வாரீர் என அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு தஞ்சை வடக்கு மாவட்டக் கழக பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ அறிக்கை வெளியிட்டுள்ளார்.

### திருச்சியில் நடைபெறுகிற

# தி.மு.க. மாநில மாநாட்டிற்கு அலை கடலென திரண்டு வாரீர், வாரீர்!

## கிருஷ்ணகிரி மாவட்டச் செயலாளர்கள்

## ஒய் பிரகாஷ் எம்.எல்.ஏ. –தே.மதியழகன் எம்.எல்.ஏ. அறிக்கை!

கிருஷ்ணகிரி, மார்ச் 9 -

கிருஷ்ணகிரி மாவட்டச் செயலாளர்கள் ஒய்.பிரகாஷ் எம்.எல்.ஏ. - தே.மதியழகன் எம்.எல்.ஏ. அறிக்கை வருமாறு:

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு தளபதியார் அவர்களின் ஆணைபடியும், கழக இளைஞரணி செயலாளரும், தமிழ்நாடு துணை முதலமைச்சருமான மாண்புமிகு இளம் தலைவர் அவர்களது ஆலோசனைபடி திராவிட முன்னேற்ற கழகத்தின் தீரர்களின் கோட்டையம் திருச்சியில் மார்ச் 9 ஆம் தேதி நடைபெற உள்ள திமுக திராவிட முன்னேற்றக் கழகத்தினர் 10 லட்சம் பேர் கலந்துகொள்கின்ற திமுக மாநில மாநாட்டில் கிருஷ்ணகிரி கிழக்கு &மேற்கு மாவட்டத்தைச் சேர்ந்த





பல்லாயிரக்கணக்கானோர் பங்கேற்று “வெல்வோம் 200 படைப்போம் வரலாறு” என்கின்ற தாரக மந்திரத்திற்கு வலுசேர்க்கும் வகையிலும்,

திராவிட முன்னேற்றக் கழகம் தமிழ்நாட்டில் ஏழாவது முறையாக மக்கள் பணியாற்றுவதற்கு ஆட்சியில் அமர்வ தற்கு ஏதுவாக வும் கழகத் தலைவர்,

தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்கள் இரண்டாவது முறையாக மீண்டும் தமிழ்நாடு முதலமைச்சராக அரியணையில் அமர்வதற்கு ஏதுவாகவும் தமிழக மக்களின் அசைக்க முடியாத சக்தியாக 2.0 திராவிட மாடல் ஆட்சி தொடர்வதற்கும் உறுதியாக ஏற்க்கும் வகையில்

கிருஷ்ணகிரி கிழக்கு மற்றும் மேற்கு மாவட்டத்தில் உள்ள மூத்த முன்னோடிகள், முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில, மாவட்ட , மாநகர நிர்வாகிகள், அனைத்து அணிகளின் தலைவர், துணைத் தலைவர்,துணை அமைப்பாளர்கள், மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள் , மகளிர் அணியினர், இந்நாள், முன்னாள் உள்ளாட்சி பிரதி நிதிகள், வாக்குச்சாவடி முகவர்கள், வாக்குச்சாவடி ஒருங்கிணைப்பாளர்கள், BLA 2, BLC, BDA, வார்டு, வட்ட, கிளை கழக செயலாளர்கள், நிர்வாகி கள், கழகத் தோழர்கள் அனைவரும் அலைகடலென திரண்டு வந்து திராவிட முன்னேற்றக் கத்தின் கோட்டையாம் திருச்சியில் மீண்டும் திராவிடமாடல் 2.0 திராவிட மடல் ஆட்சி அமைய தற்கு உறுதிய ஏற்க அனைவரும் திரண்டு வாரீர், வாரீர் என அழைக்கிறேன்.



வேலூர் மாநகராட்சி மண்டலம் 1ல்காட்பாடி பவானி நகரில் சட்டமன்ற உறுப்பினர் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்களின் தொகுதி மேம்பாட்டுநிதியின்கீழ் 6.10லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தை மாவட்ட ஆட்சித்தலைவர் வே.இரா.சுப்புலட்சுமி திறந்து வைத்தார். உடன் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர் ஆனந்த், மாநகராட்சி துணை மேயர் எம்.சுனில்குமார், மண்டல குழு தலைவர் புஷ்பலதா வன்னியராஜா, மாநகராட்சி கமிஷனர் லட்சுமணன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### விழுப்புரம் வடக்கு மாவட்டத்தில்

# பா.ம.க. - அ.தி.மு.க.வினர் 1000 பேர் கழகத்தில் இணைந்தனர்!

## மாட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. முன்னிலையில்!

செஞ்சி, மார்ச் 9 -

மயிலம் சட்டமன்ற தொகுதி தி.மு.க. சார்பில் அ.தி.மு.க.,அ.தி..மு.க ஓ.பி. எஸ். அணி, பாமக, த.வெ.க. உள்ளிட்ட மாற்று கட்சியினர் 1000க்கும்மேற்பட்டோர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் மாசிலாமணி ஏற்பாட்டில் அக்கட்சியில் இருந்து விலகிவிழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ முன்னிலையில் திமுகவில் இணைந்தனர்.





மைலம் மார்ச் 8.விழுப்புரம் வடக்கு மாவட்டம் மயிலம் சட்டமன்ற தொகுதி கூட்டேரிப்பட்டில்அதிமுக, அதிமுக ஓபிஎஸ் அணி, பாமக, தவெக உள்ளிட்ட மாற்றுகட்சியினர் தி.மு.க.வில் இணையும் விழா நடைபெற்றது.

தலைமை தீர்மான குழு துணைத் தலைவரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் மாசிலாமணி ஏற்பாட்டில் ,

அ.தி.மு.க. ஓ.பி.எஸ். அணியின் மயிலம் ஒன்றிய செயலாளர்கள் எஸ்.டி.சங்கர், ரெட்டணை ரமேஷ், ஒன்றிய துணைச் செயலாளர் வீடூர் ரஞ்சித்குமார், மகளிர் அணி ஒன்றிய செயலாளர் மயிலம் லட்சுமி,மாவட்ட எம்.ஜி.ஆர். அணி செயலாளர் காளி, முன்னாள் அதிமுக எம்,ஜி,ஆர், மன்ற செயலாளர் பத்மநாபன், மாவட்ட விவசாய துணை செயலாளர் சிவசங்கர், மாவட்ட அண்ணா தொழிற்சங்க செயலாளர் இளங்கோவன், ஒன்றிய விவசாய அணி துணை செயலாளர் ஐயப்பன், உள்ளிட்ட அ.தி. மு.க., பா.ம.க., தவெகஉள்ளிட்ட 1000க் கும்மே ற்பட்ட மகளிர் உள்ளிட்ட மாற்று கட்சியினர் அக் கட்சியிலிருந்து விலகி கூட்டேரி ப்பட்டில்நடைபெற்ற நிகழ்ச்சி யில்விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம் எல்ஏ முன்னிலையில் திமுகவில் இணைந்தனர்.

தி.மு.க.வில் இணைந்த அனைத்து நிர்வாகிகளுக்கும் விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ சால்வை அணிவித்து வரவேற்று வாழ்த்து தெரிவித்தார்.

அப்போது நிகழ்ச்சியில் பேசிய அவர் தமிழ்நாடு முதலமைச்சரின் எண்ணற்ற பல திட்டங்களால் இன்று இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களில் தமிழ்நாடு முன்னிலை பெற்றுள்ளது. தமிழ்நாடு முதலமைச்சர் நம்பர் ஒன் முதலமைச்சராக திகழ்ந்து இன்று ஓரணியில் தமிழ்நாடு என்ற முன்னெடுப்பாள் பல்வேறு மாற்று கட்சியினர் திமுக கழகத்தில் இணைந்துள்ளனர். ऽ அந்த வகையில் இன்று மயிலம் சட்டமன்ற தொகுதியில் அதிமுக ஓபிஎஸ் அணி உள்ளிட்ட மாற்று கட்சியினர் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் திமுகவில் இணைந்துள்ளனர். திமுகவில் இணைந்த அனைவரும் எதிர்வரும் சட்டமன்றத் தேர்தலில் கடுமையாக உழைத்து மயிலம் சட்டமன்றத் தொகுதியை கழகத் தலைவர் முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் தொகுதியாக மாறுவதற்குஅனைவரும் ஒற்றுமையுடன் உறுதியுடன் உழைக்க வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

நிகழ்ச்சியில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சேது நாதன், மாவட்ட அவைத் தலைவர் டாக்டர் சேகர், தலைமை தீர்மானக் குழு உறுப்பினர் செஞ்சி சிவா,செயற்குழு உறுப்பினர் நெடுஞ்செழியன், ஒன்றிய செயலாளர்கள் மணி மாறன், செழியன், ராஜாராமன்,அண்ணாதுரை, மொடையூர் துரை, இளம் வழுதி, பொதுக்குழு உறுப்பினர் வீடூர் ரவி,

மாவட்ட ஊராட்சிகுழு உறுப்பினர் விஜயன் ,மயிலம் சட்டமன்ற தொகுதி தேர்தல் பணிக்குழு ஒருங்கிணைப்பாளர்கள் பாலசுந்தரம், நெடி சுப்பிரமணி, வழக்கறிஞர் கமலக்கண்ணன், ராஜ்பரத் ,மாவட்ட சிறுபான்மையினர் அணி அமைப்பாளர் அன்சாரி,வந்தவாசி தொகுதி தேர்தல் பார்வையாளர்கேணிப்பட்டு செந்தில்குமார் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டி ஊராட்சி ஒன்றியம் கீழஈரால் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் மாற்றுத் திறனாளிகள் நலத்துறை மற்றும் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகம் சார்பில் சட்டமன்ற உறுப்பினரின் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் மாற்றுத் திறனாளிளுகக்கான இணைப்பு சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்களை விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர்,ஜீ.வி. மார்கண்டேயன் வழங்கினார். நிகழ்வில் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் பிரம்மநாயகம் ஒன்றிய செயலாளர்கள் நவநீத கண்ணன், அன்புராஜன், இம்மானுவேல், உள்ளிட்ட கழக நிர்வாகிகள் துறை சார்ந்த அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.